புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# 'குன்னிமுத்து' நாவலில் வட்டார அரசியல்

ஸ். ஜாஸ்மின் ஷெர்லி
பதிவு எண் : 21213114022016
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,
மார்த்தாண்டம் - 629165

முனைவர் செ. செல்வகுமார்,
நெறியாளர் & இணைபேராசிரியர், தமிழ்த்துறை,
தமிழாய்வு மையம், நேசமணி நினைவு
கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம் - 629165
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி

ஆய்வுச்சுருக்கம்

தனித்த அரசியலைக் கொண்ட வட்டார அடையாளம் மதம், சாதி அரசியலாக எங்ஙனம் முரண்கொள்கிறது என்பதும், இந்த முரண், மோதலாக வெடிப்பதையும் குன்னிமுத்து நாவலின் வாயிலாக ஆராயப்படுகிறது. இதில் குன்னிமுத்து நாவல் குறித்த செய்தியும் இடம்பெறுகிறது. வட்டார அரசியலுக்குள் நிகழும் கூறுகள் ஆராயப்படுகின்றன.

விளவங்கோடு வட்டாரம் என்ற பகுதிக்குள் நடக்கும் இயல்பான முரண்களும், தேர்தல் சமயத்தில் வெளிப்படும் புதிய முரண்களும், கிறிஸ்தவத்திற்குள்ளேயும், இந்து சமயத்திற்குள்ளேயும் செயல்படும் உள் முரண்களும் நாவலில் எங்ஙனம் வெளிப்படுகிறது என்பதை இந்தக் கட்டுரை ஆராய்கிறது.

## முன்னுரை

குமரி மாவட்டம் தனக்குரித்தான அரசியலைக் கொண்ட தனித்த இயல்புடைய பகுதியாகும். தமிழகத்தின் இதர மாவட்டங்களில் கனலும் சாதிஅரசியல் இங்கு மதஅரசியலாக வடிவம் கொண்டுள்ளது. சாதிய முரண்பாடுகள் ஏதோ ஒருவகையில் மதமோதலாக வெடித்துக்கிளம்புவதாக அவதானிக்கலாம்.

இந்த நாவலின் அரசியல் குறித்து எழுதும்போது நீல பத்மநாபன், "மதத்தின் தத்துவ வேறுபாடினாலோ மெய்யறிவுத் தாக்கத்தினாலோ அல்ல இங்கு நடக்கும் மதமாற்றங்கள். அதைப் போலவே, அப்போதைய அரசியல் ஆதாயகளுக்காகத்தான் கட்சி மாற்றங்களும் நடக்கின்றன. அநியாயமான வழிகளில் பண சம்பாதிப்பு, அபரிமிதமான, வக்கரித்த காம இச்சை பூர்த்தி இவற்றிற்கு அரசியல்வாதிகளுக்கு மத குருக்களும் சளைத்தவர்களில்லை" (நீலபத்மநாபன், மண்ணின் ஐதீகமும், தொன்மங்களும் சேர்ந்த புதிய பரிமாணம், தீராநதி, டிசம்பர்:2013, ப. 51) என்கிறார்.

குமரியில் முதல் நவீன நாவலாக அறியப்படும் சுந்தர ராமசாமியின் 'புளியமரத்தின் கதை நாவல் தொடங்கி ஜெயமோகனின் 'ரப்பர்', முகிலை ராசபாண்டியனின் 'அலைகளின் காலம்', பொன்னீலனின் 'மறுபக்கம்' போன்ற நாவல்களில் மதம் முன்னின்று சாதி மறைந்து வெளிப்படுவதை வாசிப்பினூடாக அறியலாம். அநேகமாக இந்த நாவல்கள் அனைத்துமே வட்டார அரசியலைப் பேசுகின்ற நாவல்கள். குமாரசெல்வாவின் குன்னிமுத்து நாவல் மேற்குறித்த நாவல்கள் குறிப்பிடாத மற்றுமொரு வட்டார அரசியலின் புதிய முரண்பாட்டை முன்வைக்கிறது. அதையே பொருண்மையாகக் கொண்டு இந்தக் கட்டுரை அமைகிறது.

*‘குன்னிமுத்து’ நாவல்*

*குமாரசெல்வா எழுதி 2012-ஆம் ஆண்டு 'காலச்சுவடு' பதிப்பகத்தின் முதற்பதிப்பாக வெளிவந்த இந்த நாவல் தமிழ்நாவல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம் பிடித்த நாவலாகும். இது குறிப்பிட்ட வயது வந்தும் பருவமடையாத இருளி என்ற பெண்மணியின் துயரத்தைப் பேசும் நாவலாகும். இந்த நாவல் புதியபொருண்மையுடன் கூடிய உள்ளடக்கத்தைக் கொண்டு திகழ்கிறது.*

*இந்த நாவலின் உள்ளடக்கத்தை சுருக்கமாக தரும் ராஜ் என்பவர், “குன்னிமுத்து தமிழகத்தின் கடைக்கோடியில் அமைந்திருக்கும் விளவங்கோடு வட்டார மக்களின் வாழ்க்கை அரசியல்,பண்பாட்டு உரசல், மத மோதல், மங்கி ஒலிக்கும் அறக்குரல் அறியவற்றை கவனப்படுத்தியிருக்கும் முக்கியமானதொரு நாவல். தமிழகத்திலிருந்து சற்றே வேறுபட்ட அரசியல் தட்பவெட்ப சூழலைக் கொண்டது குமரி மாவட்டம். இந்துக்களின் மத நம்பிக்கையில் இந்துத்துவம் ஆழப்பதிந்து வன்முறை உணர்வை வேர்விட செய்துள்ளது. பெந்தெகொஸ்து சபைகள் பெருகி இந்துத்துவம் பகைமை பாராட்டும் மக்கள் பிரிவை மனநோயாளியாக மாற்றி வருகிறது. மக்களின் எதார்த்த வாழ்க்கையை சிதைக்கும் இந்த அவலத்தை புனைவு களத்தில் நமக்கு அறிய தருகிறார் நாவலாசிரியர் குமாரசெல்வா.” (ராஜ், ஒரு எல்லைக்கோடி தமிழ்நிலத்தின் வளர்சிதை கதையாடல்கள், இடைவெளி, ஆக:2018,ப.54)*

*நாவல் குறுக்கும் நெடுக்குமாக இரண்டு விதமான அரசியலை முன் வைக்கிறது. முதலாவதாக குறிப்பிட்ட வட்டாரத்திற்கே உரியதான தனித்தன்மையுடன் கூடிய அரசியல். இரண்டாவதாக நாவல் வெளிப்படுத்தும் பண்பாட்டு அரசியல். இவற்றோடு சேர்ந்து அல்லது இவற்றின் தாக்கத்தில் உருவான சுதைமாந்தர்களாக நாவலில் வெளிப்படும் பாத்திரங்கள் அமைந்துள்ளன.*

*வட்டார அரசியல்*

*வட்டாரம் என்பது குறிப்பிட்ட நிலவியல் பொதுவிலான கருத்தியலில் அமைந்த பிரதேசமாகும். அப்பகுதியிலுள்ள மக்களின் உடை, பழக்கவழக்கங்கள், பேச்சு, மொழியில் வித்தியாசங்கள், பண்பாட்டுத் தொடர்புகள் இவையாவும் சேர்ந்து வட்டாரத்திற்குரிய தனித்தன்மையை வழங்குகின்றன.*

*குன்னிமுத்து நாவல் குறிப்பிடும் வட்டாரம் குமரி மாவட்டத்திற்கு உள்ளடங்கிய மேற்குப்பகுதியான விளவங்கோடு வட்டாரமாகும். அதற்குள்ளும் தனித்த பண்புகளையுடைய உள்வட்டாரங்களையும் அவற்றிற்கே உரித்தான பண்பாட்டுக் கூறுகளையும் காண முடிகிறது. உதாரணமாக தேர்தல் சமயத்தில் வெளிப்படும் சாதிரீதியிலான முரண்பாடு கட்சிகளுக்குள் எதிரொலிக்கும் தன்மை குன்னிமுத்து நாவல் சுட்டிக்காட்டும் இடத்தைக் கூறலாம்.*

*இது குறித்து இலக்கிய விமர்சகர் ந.முருகேச பாண்டியன் எழுதும்போது, “பத்ரகாளியம்மன் கோயில் பூசாரியாகப் பரம்பரை அடிப்படையில் வந்த தங்கநாடனின் உரிமை மறுக்கப்பட்டு, பிராமணரான ‘போற்றி’, பூசாரியாக நியமிக்கப்படுகிறார். இந்துத்துவா என்ற அரசியல் அதிகாரத்துடன் நாட்டார் சமயத்தை ஒன்றிணைப்பது நடந்தேறுகிறது. இன்னொருபுறம் டயோசிஸ் அமைப்பினால் நடத்தப்படுகிற, கிறிஸ்தவத் திருச்சபையில் நடைபெறும் அதிகாரப் போட்டி உக்கிரமாக இருக்கிறது. அன்றாடம் யாரையாவது ஏமாற்றிப் பிழைக்கிற நடராஜன், கிறிஸ்தவனாக மதம் மாறி, சர்ச்சில் செயலராகிச் சுரண்டுவது நடைபெறுகிறது.” (முருகேச பாண்டியன்.ந, குன்னிமுத்து, விகடன் தடம், டிச: 2017,ப . 57) என்கிறார்.*

*பத்திரகாளிக்கோயில் பூசாரியாக இருந்த தங்கநாடான் என்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர் ஒருநாள் காலையில் மாற்றப்பட்டு அந்த இடத்தில் சமஸ்கிருதத்தில் பூஜை செய்யும் போற்றி பிராமணர் ஒருவர் பணியமர்த்தப்படுகிறார். தங்கநாடான் பிழைக்க வழியின்றி சைக்கிள் கடை ஒன்றை வைத்து ஜீவிக்கிறார். அந்த சமயம் பாராளுமன்ற நேர்தல் வருகிறது.*

*தனது வேலை பறிப்போவதற்கு காரணமாக இருந்தவர் நாயர் சமூகத்தைச் சேர்ந்த பத்மநாபன் ஆவார். இவர் பத்திரகாளிக்கோயிலை கிராம வழிபாட்டு முறையிலிருந்து மாற்றி பத்ரேஸ்வரி என்னும் மேல்நிலையாக்க மதிப்பீட்டில் போற்றி பிராமணன் ஒருவனை பூசாரியாக்கி ஆகம விதிமுறைகளின்படி சமஸ்கிருத மொழியிலான வழிபாட்டைக் கொண்டு வருகிறார்.*

*வேலை பறிபோன ஆவேசத்தில் தங்கநாடான் பல தலைவர்களை நாடி அவர்களிடம் தனது துயரத்தை எடுத்துரைக்கிறார். யாருமே அவரது பிரச்சினைக்கு செவிக்கொடுக்கவில்லை. இதனால் அடுத்த பாராளுமன்ற தேர்தலில் இந்துக்கள் சார்பில் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பொன். சீதாராமனை எதிர்த்துப் போட்டி இடுகிறார்.*

*தேர்தல் பிரச்சாரம் செய்யும் காலத்தில் ஒருநாள் பத்மநாபன் தம்பி தங்கநாடானின் வீடு தேடி வருகிறார். அவரை சுத்தமாகப் பிடிக்காதிருந்த போதிலும் உட்கார வைத்துப் பேசுகிறார் தங்கநாடான். அதன்படி உடனே போட்டியிலிருந்து விலகுமாறும் தங்கநாடான் செலவாக்கிய பணத்தை அதற்குப் பிரதிபலனாக பெற்றுத்தருவதாகவும் கூறுகிறார்.*

*ஆவேசம் கொண்ட தங்கநாடான் காலகாலமாகத் தான் பணிபுரிந்த கோயிலை விட்டு வெளியேற்றிய கட்சியினருக்கு எதிராக போட்டியில் நின்று வெற்றிக்காண்பதே இலட்சியம் என்கிறான் தங்கநாடான். புத்மநாபன் தம்பி உடனே இறங்கி வந்து "உன்னிடம் யார் தங்கநாடானுக்கு எதிராகப் போட்டியிடச் சொன்னது? உனது வாக்குகளை பெல்மனுக்கு சுத்தியல் அரிவாள் சின்னத்தில் அளிக்குமாறு வேண்டுவதற்காகத் தான் வந்தேன்" என்றார். இது கேட்டு தங்கநாடான் ஆச்சரியம் அடைகிறார்.*

*வீட்டுக்கு வந்த பத்மநாபன் தம்பி சாய்வு நாற்காலியில் அமரும்போது அவரது மனைவி பார்கவி ''இந்துவாகிய நீங்கள் எதற்கு கம்யூனிஸ்ட்டுகளுக்கு ஓட்டுப்போடச் சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்கிறார். உடனே தம்பி, பார்கவியைப் பார்த்து பெல்மன் எம்.பி. ஆனால் எம்பியாக மட்டுமே இருப்பார். அதே சமயம் சீதாராமன் வெற்றிப்பெற்றால் இந்திய பாராளுமன்றத்தில் மந்திரியாவார். பனையேறிகள் நாட்டை ஆளுவதா?'' என்று எதார்த்தத்தைப் பேசுகிறார்.*

*இந்த முரண்பாட்டில் பலவித உண்மைகள் வெளிப்பட்டு நிற்கின்றன. இந்து கட்சியைச் சேர்ந்த பத்மநாபன் தம்பி தனது கட்சிக்கு ஆதரவாக இருக்காமல் கம்யூனிஸ்ட்டு கட்சிக்கு ஆதரவு செலுத்துமாறு மதத்தை விட சாதி முக்கியம் என்ற அடிப்படையில் அமைந்ததாகும். இந்த முரண்பாட்டை ஒரு வட்டாரத்திற்கே உரியதான பண்பாக 'குன்னிமுத்து நாவல் குறிப்பிடுகிறது.*

*வட்டாரத்திற்குரிய இன்னொரு போக்காக இந்த நாவலில் நாம் காண்பது இந்து மதவாதமும் பெந்தெகோஸ்து பக்தி மார்க்கமும் ஒரே நேர்கோட்டில் செல்லும் போக்கு ஆகும். இந்த நாவல் வட்டார அடிப்படையில் இருதுருவங்களை மையப்படுத்துகிறது. தேர்தல் அரசியலில் வெற்றிபெறும் பொன்.சீதாராமன் ஒருங்கிணைக்கும் வாக்குவங்கி அரசியல். இரண்டாவதாக 'இந்து மக்கள் கட்சி' என்னும் தேர்தல் அரசியலுக்கு அப்பாற்பட்ட இன்னொரு அணிதிரட்டல். இவ்விரண்டு தன்மைகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகக் காட்டிக்கொண்டாலும் அடிப்படையில் இந்து சமயத்தை வளர்க்கவும், ஊக்கப்படுத்தவும் இந்த முரண்பாடு அமைகிறது. ஒன்று தீவிரமுகமாக இருக்கும்போது இன்னொன்று சாந்தமுகமாக விளங்குகிறது.*

*நாவலில் வெளிப்படும் இதற்கு எதிரான இன்னொரு முரண்பாடு கிறிஸ்தவத்தின் உள்ளே நிகழும் உள் முரண்பாடு ஆகும். அது சி.எஸ்.ஐ, பெந்தேகோஸ்த்தென்று இரு பிரிவுகளாக மாறி தங்களுக்குள் முரண்பட்டு சி.எஸ்.ஐ பிரிவுக்குள் பெந்தேகோஸ்த் பக்திமார்க்கம் நிற்கின்றன. ஒருதடவை கிறிஸ்மஸ் சமயத்தில் பஜனைப்பாட சென்றிருந்த போது சி.எஸ்.ஐ காரர்களுக்கு பொன்னையா பிரசங்கியார் காணிக்கை தராமல், எனக்கு ஆர்.எஸ்.எஸ். காரர்களைவிட சி.எஸ்.ஐ. காரர்களே எதிரிகளென்று கூறுவதும் வட்டார அரசியலுக்கு ஏற்ற உதாரணமாகும்.*

*இந்த நாவலின் வட்டாரதன்மை குறித்துப்பேசும், இலக்கிய விமர்சகர் க.பஞ்சாங்கம், ''குறிப்பிட்ட ஒருசாதி சார்ந்த - ஒருவட்டார நிலம் சார்ந்த - ஒரு வட்டார மொழிசார்ந்த (விளவங்கோடு) பின்னனியில் நிகழ்ச்சிகள் எடுத்துரைக்கப்பட்டிருந்தாலும் பிரதிக்குள் விவாதிக்கப்படும் சிக்கல்கள் வட்டாரம் சார்ந்ததாக குறிப்பட்ட சாதி சார்ந்ததாக மட்டும் இல்லை. மனிதர்கள் கூடிவாழ நேர்ந்த எந்த வட்டாரத்திலும் எந்த சாதிக்குள்ளும் நிகழ்ந்து கொண்டிருப்பவைத்தான்.'' (பஞ்சாங்கம்.க; மொழியைக் கொண்டே மொழியைக் கடந்துவிடும் எழுத்தாக்கம், காலச் சுவடு, ஏப்.2023, ப.160) என்கிறார்.*

*கிறிஸ்தவத்தில் சி.எஸ்.ஐ -க்குள்ளும் விடுதலை இறையியலைப் போதிக்கும் குழுக்கள் உருவாகி வருவதையும் நாவலில் சில இடங்களில் உணர்த்துகின்றன. சாமுவேல் அமிர்தம் என்ற பேராயர் கிறிஸ்தவ சடங்கு முறைகளை மாற்றி சமூகத்திற்குப் பயனுள்ளதாகவும் சமூக வயப்படுத்துபவையாகவும் வருகின்ற இடங்கள் குறிப்பிடத்தக்கது. சுருக்கமாக குமரிமாவட்ட நிலப்பரப்பில் வட்டார அரசியலுக்கு ஏற்ப கிறிஸ்தவத்திற்கு உள்ளே உள்ள முரண்பாடுகளைப்*

போல இந்து மதத்திற்கு உள்ளாக இயங்கும் அகமுரண்பாடுகளையும் குன்னிமுத்து நாவல் சுட்டிக்காட்டுகிறது.

கட்சி அரசியல்

குன்னிமுத்து நாவலில் மதத்தை முன்னிறுத்திய அரசியல் நாவலுக்குள் இயக்கம் பெறும்போது களத்தில் கட்சி அரசியல்களும் எதிர்படுகின்றன. உதாரணமாக திராவிட அரசியல் கம்யூனிஸ்டு அரசியல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவ்விரண்டு அரசியலையும் குன்னிமுத்து நாவல் விமர்சிக்கிறது. திராவிட அரசியல் கட்சி அரசியலாக மாறும் வரலாறு பற்றி ஒரு அதிகாரத்தையே உருவாக்கியுள்ளார் நாவலாசிரியர். இதில் பெரியாரிடமிருந்து சி.என். அண்ணாதுரை முரண்படும் இடமும் இருவரின் பிணக்கும் கதையாக்கம் செய்யப்படுகிறது. பின்னர் தேர்தல் அரசியலில் செல்வாக்கு பெற்ற கருணாநிதி திராவிடக் கொள்கைக்கு, எதிர்மறையான கொள்கைகளையுடைய இந்து கட்சியான பாரதிய ஜனதாவுடன் கூட்டணி அமைப்பதை நாவலாசிரியர் எள்ளல் தொனியில் விமர்சிக்கிறார்.

பொதுவாக ஒற்றைப் பார்வையிலான அரசியல் இந்த நாவலில் எங்குமே கூறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அரசியலில் உள் இயக்கங்களையும், புறக்காரணிகளையும் விரிவாகவே குன்னிமுத்து நாவல் அலசுகிறது. ஒவ்வொன்றிற்கான முக்கியத்துவத்தைத் தனித்தனியாக கட்சி அரசியலில் எடுத்து இயங்குவது அரசியல் நாவல்களில் குன்னிமுத்து நாவலுக்கே உரித்தானத் தனித்தன்மையாக நாம் அடையாளம் காணலாம்.

பண்பாட்டு அரசியல்

குன்னிமுத்து நாவல் அரசியல் பேசும் நாவலாகத் திகழ்ந்தாலும் அதற்கு இணையாக பண்பாட்டு அரசியலும் பேசுகிறது. புராதன பண்பாட்டுமுரணை நாவல் சித்தரிக்கிறது. நாவலில் தொடக்கம் முதலே, இந்தப் பண்பாட்டு மோதல் பல தளங்களில் எதிரொலிக்கிறது. பத்திரகாளிக்கோயில் திடீரென ஒருநாள் பத்ரேஸ்வரி அம்மன் கோயிலாக மாற்றப்படுவது பண்பாட்டு மோதலின் தீவிரமாகும். மத்தியில் பொறுப்பேற்ற ஆட்சியின் தொடர்பினால் தனது பண்பாடு சம்பந்தப்படாத இன்னொரு பண்பாடு சார்ந்த மொழியும், சடங்கும் மேல்நிலையாக்கத்தின் அரசியலாகக் கொள்ளலாம்.

நாவல் காட்டும் சமூகத்தில் இந்து கிறிஸ்தவர் என்ற பேரடையாளங்களையும் தாண்டி தத்தம் நிறுவனங்குள்ளே முரண்பாடு அமைவது பண்பாட்டு மோதலாகும். இந்த முரண்பாடு மதமாக மாறும்போது வெளிப்படுகிறது. கிறிஸ்தவ சமயத்தில் பெந்தேகோஸ்த்து, சி.எஸ்.ஐ என்று முரண்கொள்ளும் ஒருமை, வழிபாடு சடங்குமுறைகள் சார்ந்தே பண்பாட்டினால் சிதறுகிறது.

பண்பாட்டுக்கலப்பு அரசியல்

கிறிஸ்தவ சமய வழிபாட்டுமரபில் சில திருத்தங்கள் செய்யப்படுவதைக் குன்ளிமுத்து நாவல் குறிப்பிடுகிறது. திருவிருந்து என்னும் நற்கருணை வழிபாடு கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் பகிர்ந்து கொள்வதின் குறியீடாகும். இதில் பேராயர் சாமுவேல் அமிர்தம் ஒரு திருத்தத்தைக் கொண்டுவருகிறார். திருச்சபையினரை தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிக்கு அழைத்துச் செல்கிறார். அங்கே ஒரு பானையில் அரிசி போட்டு உலையேற்றினார். அந்தப் பகுதியிலுள்ள அனைத்து சமூகத்தைச் சேர்ந்த மக்களையும் அழைத்து வந்து அனைவருக்கும் கஞ்சி பரிமாறி இது கிறிஸ்துவின் சரீரமும், இரத்தமுமாய் இருக்கிறது என்று குடிக்க வைக்கின்றார்.

நாவலில் இந்த இடத்தில் நடப்பது பண்பாட்டுக்கலப்பு அரசியலாகும். வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மக்களை ஒருவருக்கொருவர் கலந்துகொள்ள வைப்பது எல்லோரையும் வேறுபட்ட தன்மையிலிருந்து ஒன்றுபட்ட தன்மைக்கு நேராக செயல்பட வைப்பதாகும். இது பண்பாட்டு மோதலுக்கு எதிரான முரணாக முன்வைக்கப்படுகிறது. நாவலில் கிறிஸ்தவ சமயத்தில் நடக்கும் இந்தப் பண்பாட்டுக் கலப்பு இந்து சமயம் என்று வரும் போது ஒன்றோடொன்று சேராமல் தனித்தே இயங்குகிறது.

முடிவுரை

குன்னிமுத்து நாவல் குறிப்பிடும் வட்டார அரசியல் ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் உரிய அரசியல் பண்பாட்டுக்குரிய பொதுவில் அமைந்தது தான் என்றாலும் வட்டாரம் என்று அமையும் போது அதற்குள்ளாக வேறுபட்ட முரண்களைக் கொண்டுள்ளது. என்பதே இக்கட்டுரை வாயிலாக நாம் அவதானித்த கருத்தாகும். நாவலில் ஓரிடத்தில் இந்து இளைஞர்கள் வேற்றுமதப் பெண்களை மணம் புரிவதன் வாயிலாக இந்துக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதாக வரும் இடம் ஆகும். இந்த இடத்தில் பண்பாட்டுக் கலப்பு நிகழாமல் பண்பாட்டு ஒருமை காக்கப்படுகிறது. அதுபோல நாவலில் வரும் அரவிந்தன், மணிகண்டன் தனது தாயிடம் துறவியாக அமர்ந்து பேசும்போது தாயிலும் மேலான பசுவைக் கொன்று புசிப்பது நரமாமிசம் சாப்பிடுவதை விட கேவலமானது என்கிறான். அவனது தாயாரான கிரேசி தங்கள் சமூகத்தில் பசு வளர்ப்பதும், அவற்றைப் பாதுகாப்பதும், கொன்று புசிப்பதும் காலம் காலமாக நடைபெற்று வரும் பாரம்பரியமாகக் கூறும் இடம் உணவு விஷயத்தில் ஏற்படும் பண்பாட்டு வேற்றுமையை எடுத்துரைக்கிறது.

இவ்வாறாக குன்னிமுத்து நாவலில் வெளிப்படும் வட்டார அரசியல், அரசியலுடன் சேர்ந்த சமூகம், சமூகத்துடன் சேர்ந்த பண்பாடும் என முக்கோண நிலையில் சித்தரிக்கப்பட்டுள்ளது. இதில் வட்டாரத்திற்குரியத் தனித்தன்மைகள் அடங்கியுள்ளன எனலாம்.

துணைநூற்பட்டியல்

இதழ்கள்

1. இடைவெளி, பரிசல் புத்தகநிலையம், சென்னை 600005, ஆக: 2018
2. காலச்சுவடு, நாகர்கோயில் - 629001
3. தீராநதி, டிச: 2013, குமுதம் பப்ளிகேஷன்ஸ், சென்னை - 600031
4. விகடன் தடம், டிச:2017,ஆனந்த விகடன் பப்ளிகேஷன்ஸ் சென்னை - 600002

********* ********* ********** ********* ********* ********** ********** **********